விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 24
ஒலி 234 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 25 வியாழக்கிழமை (10.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# வடக்குக் கிழக்கு மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்

## பாராளுமன்றில் ஜனாதிபதி விசேட உரை



(கொழும்பு)

**வடக்குக் கிழக்கு மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தனது பாராளுமன்ற உரையில் தெரிவித்துள்ளார்.**

தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில், யுத்தத்தில் காணாமல்போன வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த 203 பேருக்கு ஜூலை 2023ஆம் ஆண்டு வரை 40.6 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. இந்த செயல்முறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

OMP அலுவலகத்திற்கு கிடைத்த 21,374 முறைப்பாடுகளில், 3,462 மீதான விசாரணைகள் இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீத முள்ள முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இராணுவம் மற்றும் கடற் படையினரால் அடையாளம் காணப்பட்டுள்ள, யாழ்ப்பாணத்தில் 1.4 ஏக்கர், கிளிநொச்சியில் 13 ஏக்கர் மற்றும் முல்லைத்தீவில் 20 ஏக்கர் காணிகள் 15

### பறாளாய் முருகன் ஆலய விவகாரம்

## தொல்லியல் திணைக்களத்திடம் விசாரணை நடத்த ரணில் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பறாளாய் முருகன் கோயிலின் தல விருட்சமான அரச மரத்தின் ஆயுட்காலத்தை தீர மானிக்க விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சி செய்து முறையற்ற விதமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெற நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் எம்.பீக்களிடம் வாக்குறுதி அளித்துள்ளார். 15

## நாய்க்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் மரணம்

### இருபாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நாய்க்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் இருபாலையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் ரமேஸ் (வயது-42) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபருக்கு ஒரு மாதத்துக்கு முன் நாய் கடித்ததாக தெரிவிக்கப்பட்டு 16

## வடமராட்சியில் வீதி விபத்து

### இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் 15

## தமிழர்கள் தனித்து செல்வதற்கு சர்வஜன வாக்கெடுப்புக்கு தயாரா?

### சவால் விடுத்த சிறீதரன்; நழுவினார் ரணில்



(கொழும்பு)

தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா? சமஷ்டி அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா? என்பதை அறிய வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்களிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த நீங்கள் தயாரா? என சிறீதரன் எம்.பி ஜனாதிபதியிடம் 15

## கர்ப்பவதிகள், குழந்தைகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கடுமையான வெப்பம் நிலவுகின்ற இந்த நாட்களில் கர்ப்பவதித் தாய்மார்கள் கடுமையான சூரிய ஒளியில் இருக்க வேண்டாம் என அரச குடும்பசுகாதாரசேவை உத்தியோகத்தர் 16

## 13ஐ உதாசீனம் செய்ய முடியாது

### சபையில் ஜனாதிபதி

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தை உதாசீனம் செய்ய முடியாது என தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என்றார். 15

## வடக்கில் தமிழ் அரச ஊழியர்கள் விடுமுறை எடுப்பது திட்டமிட்டு தடுக்கப்படுகிறது

### ஆளுநர் தலையிட வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச பணியாளர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை செய்யும் பொருட்டு விடுமுறை பெறுவதற்கான அரச சுற்றுநிருபம் வெளியிடப்பட்ட போதிலும் அது விடயத்தில் வட மாகாண அரச அதிகாரிகள் காட்டிய அசமந்தத்தால் தமிழ் அரச ஊழியர்கள் பலரும் விடுமுறை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதிலும் விடுமுறை தொடர்பாக அரசு வெளியிட்ட முதலாவது சுற்றுநிருபத்தின் பிரகாரம் விடு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா சுற்றுலா விசா

சுற்றுலா விசா மூலம் கனடாவிற்கு மிக குறுகிய காலத்தில் குறைந்த செலவில் செல்வதற்கு எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.
சட்ட ரீதியாக கனடாவில் குடியேறுவதற்கான வாய்ப்பினை நாங்கள் உங்களுக்கு பெற்றுத் தருகிறோம்.

**Hybrid International Hub(pvt) ltd Jaffna**

(C-7031)

**021 222 1265, 076 250 0098**



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


## சாவகச்சேரி பிரதேச சபை

**01.09.2023 முதல் 31.12.2023 வரை மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல் - 2023**

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 11.08.2023 - 18.08.2023 பி.ப 3.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி: 21.08.2023 முப 10.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 21.08.2023 மு.ப 10.30 மணி

| இல. | கேள்வி கோரப்படும் இடங்கள் | ஆரம்ப ஏலத் தொகை | கேள்வி வைப்பு (மீளளிக்கக்கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| கச்சாய் உப அலுவலகம் | | | | |
| 1 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 253,500.00 | 2,600.00 | 500.00 |
| 2 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 339,500.00 | 3,400.00 | 500.00 |
| வரணி உப அலுவலகம் | | | | |
| 3 | வரணி மாட்டிறைச்சிக்கடை | 115,500.00 | 1,200.00 | 500.00 |
| 4 | வரணி கோழி இறைச்சிக்கடை | 12,800.00 | 500.00 | 500.00 |
| 5 | வரணி பொதுச்சந்தை | 18,500.00 | 500.00 | 500.00 |
| கைதடி உப அலுவலகம் | | | | |
| 6 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 61,000.00 | 650.00 | 500.00 |
| 7 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 71,500.00 | 750.00 | 500.00 |
| மிருசுவில் உப அலுவலகம் | | | | |
| 8 | மிருசுவில் பொதுச்சந்தை | 2,000.00 | 500.00 | 500.00 |
| 9 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 33,500.00 | 500.00 | 500.00 |
| நாவற்குழி உப அலுவலகம் | | | | |
| 10 | நாவற்குழி பொதுச்சந்தை | 9,000.00 | 500.00 | 500.00 |

**நிபந்தனைகள்:-**

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் 11.08.2023 தொடக்கம் 18.08.2023 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேச சபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித் தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வி வைப்புத் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)
4. 21.08.2023ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப் படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக் கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக் கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத்வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு, இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/2 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை இரு பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"செயலாளர், சாவ கச்சேரி பிரதேச சபை, A9 வீதி கொடிகாமம்"** என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேச சபை. (C-7042) 10.08.2023

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

### மீள் கேள்வி அறிவித்தல் - 2023

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறை வரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் :
  ரூபா **1,000.00 + Vat 15%**
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :-
  **10.08.2023** தொடக்கம் **17.08.2023** வரை (ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப **9.00** - பி.ப **2.30** மணி வரை)
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித்திகதி :-
  **17.08.2023** பி.ப **12.30** மணி வரை
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :-
  **18.08.2023** முற்பகல் **10.00** மணிவரை
- கேள்விப்படிவம் திறத்தல் :-
  **18.08.2023** முற்பகல் **10.00** மணிக்கு
- தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் :-
  ரூபா **2,000.00**

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 18.08.2023 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமூகமளித்தல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வை யிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.** (C-7041)

## கேள்வி அறிவித்தல் - திருத்தம்

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG) வேலைத்திட்டம்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

மேற்படி விடயம் தொடர்பில், 09.08.2023ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் 12ம் பக்கத்திலும், வலம்புரி பத்திரிகையில் 09ம் பக்கத்திலும் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் 6ம், 7ம் பந்திகள் மற்றும் அட்டவணை என்பன பின்வருமாறு திருத்தி யமைக்கப்படுகின்றது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை *தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய்* எனும் முகவரியில் 09.08.2023ஆம் திகதியிலிருந்து 22.08.2023ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல் ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 23.08.2023ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல. | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01. | திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ நிலையத்தில் கட்டடம் மற்றும் கொங்கிறீற் தளம் அமைத்தல் விரிவாக்கல் வேலை - கல்லுண்டாய் NP/14/41(16)/W/PSDG/2023/23 | 5.65 | 98 நாட்கள் | C8,C7 and C6 (கட்டடம்) | 07.11.2023 | 56,600.00 | 05.12.2023 |
| 02. | எரிகொட்டகை அமைத்தல் - கொத்துக்கட்டி இந்து மயானம், நவாலி தெற்கு NP/14/41(16)/W/PSDG/2023/24 | 1.30 | 45 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 10.10.2023 | 13,100.00 | 07.11.2023 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.** (C-7043) **10.08.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு பழுதடைந்ததால்

# யாழைச் சேர்ந்த 3 மீனவர்கள் தமிழகத்தில் கரையொதுங்கினர்

(யாழ்ப்பாணம்)

படகு பழுதடைந்தமையால் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மூன்று கடற்றொழிலாளர்கள் தமிழகம் வேதாரண்யம் பகுதியில் கரையொதுங்கி உள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியை அற்புதராஜா ஸ்ரீகாந்தன் (வயது 37), வல்வெட்டித்துறையை சேர்ந்த சு.சிவகுமார் மற்றும் குருநகரை சேர்ந்த றொபின்சன் றீகன் (வயது 24) ஆகிய மூவருமே கரையொதுங்கியுள்ளனர்.

எழுவைதீவில் இருந்து கடந்த 6 ஆம் திகதி கடற்றொழிலுக்காக படகொன்றில் சென்ற வேளை படகு பழுதடைந்த நிலையில் வேதாரண்யம் பகுதியில் கரையொதுங்கியதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்களை தமிழக கடலோர காவல் படையினர் மீட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-33)



மானிப்பாய் சென்.ஜோன்ஸ் றோ.க.த.க பாடசாலைகளில் மாணவர்கள், பெற்றோர்களுக்கான கல்வி விழிப்புணர்வு கூட்டம் வலிகாம கல்வி வலய செயற்றிட்ட அலுவலர் ந. சண்முகராஜாவின் வழிப்படுத்தலில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது.

# உடவளவ நீர்த்தேக்கத்தை திறந்து விவசாயத்தைக் காப்பாற்றுங்கள்!

## இரணைமடு விவசாய சம்மேளனம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(முறிகண்டி)

**உடவளவ நீர்த்தேக்கத்தை திறந்து விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என இரணைமடு விவசாய சம்மேளனம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பி வைத்துள்ளனர்.**

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

உடவளவ நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் 25,000 ஹெக்டேயர் வயல் நிலங்கள் ஓர் இரு நீர்ப்பாசனத்தை எதிர்பார்த்து எரிவடையும் நிலையை அடைந்துள்ளன. இதனால் 30,000 வரையான விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகி உள்ளது. அத்தோடு இதன் விளைவாக கிடைக்க இருந்த 250,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி வீழ்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளது.



எனவே தயவுகூர்ந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காப்பாற்றும் நோக்கோடும் தேசிய உற்பத்தியைப் பாதுகாக்கும் நோக்கோடும் விவசாயத்தை முதன்மையாக கொண்டு வாவியில் இருந்து உடன் நீரைத் திறந்து விட வேண்டும். மின்சாரத்தை மாற்றுவழிகள் மூலம் பெற முடியும். அல்லது மின்பாவனையை குறைக்க முடியும். குடிப்பதற்கான நீரைக் கூட கடல்நீரில் இருந்து சுத்திகரித்து எடுக்க முடியும். விவசாயத்திற்கான நீரை நாம் மழை மூலம் கிடைப்பதை தானே பயன்படுத்த இயலும்.

எனவே உணவு உற்பத்தி தொடர்ந்து நடைபெற்றே ஆக வேண்டும். இதற்கான வளங்களை நாம் வைத்துக் கொண்டு அரிசியை வெளிநாட்டில்இருந்து இறக்குவது சிறந்த விவசாயக் கொள்கையோ பொருளாதாரக் கொள்கையோ இல்லை என்பதை தெரிவிக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5-100)

# யாழ்.மாவட்ட செயலகத்தில் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மனிதவலு வேலைவாய்ப்பு நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட செயலகத்தில் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்டச் செயலக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது.

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டத் தொழில் நிலையமானது தம்மிடம் பதிவு செய்த ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரிகள் மற்றும் ஏனைய தராதரங்களையுடைய தொழில் தேடுவோருக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமையன்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் தொழிற்சந்தை நிகழ்வினை நடத்தவுள்ளது.

எனவே தங்கள் நிறுவனங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்ய விரும்புகின்ற நிறுவனங்கள் மாவட்டத் தொழில் நிலையத்தில் நேரடியாகவோ அல்லது 021 221 9359 என்ற அலுவலக தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்பு கொண்டு தொழிற்சந்தை நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அனுமதியினை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். மாவட்ட செயலர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார். (4-5)

# யானைகளால் பயிர்கள் அழிவு

(தருமபுரம்)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானை அட்டகாசத்தால் வாழ்வாதாரம் அழிவடைவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பல தடவை அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவிதப் பலனும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதியும் 3 காட்டு யானைகள் இணைந்து பெறுமதி மிக்க பயிர்களை அழித்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (4-5-316)

# மீசாலையில் விபத்து மாணவி படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை ஐயா கடைச் சந்திப் பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவி பாடசாலை முடித்து தனது தாத்தாவுடன் மோட்டார்சைக்கிளில் சென்ற வேளையில் தனியார் பேருந்து மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த 11 வயதான சிறுமி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். சிறுமியை ஏற்றிச் சென்ற 77 வயதான முதியவர் கையில் சிறு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

# ஆண்டு நிறைவை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

புலோலி வடமேற்கு முருகன் கோவிலடி அறிவகம் சனசமூக நிலைய .68 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி சைக்கிள் ஓட்டம்,மரதன் ஓட்டம்,கயிறு இழுத்தல் போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன.

போட்டியாளர்கள் பதிவுகளை மேற்கொள்ள 077 520 1721 அல்லது 076 916 7494 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4-5)

# யாழில் ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சி வழங்க திட்டம்

## யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்குரிய மனித உள்ளார்ந்த வளம் சம்பந்தப்பட்ட பயிற்சி தேவை என தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கு முதல் கட்டமாக குறித்த பயிற்சி வழங்கப்படவுள்ளது என தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், சிறுவர் அபிவிருத்தி எனும் போது பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சி தேவை. நாளாந்த செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உளவள பயிற்சி தலைமைத்துவ பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் இது தொடர்பில் கதைத்திருந்தேன். தனியார் நிறுவனம் ஊடாக குறித்த பயிற்சியை வழங்குவதுடன் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கு முதல் கட்டமாக வழங்குவதுடன் பின்னர் கட்டம் கட்டமாக பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள் குறித்த விடயத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (4-5)

# திருவள்ளுவர் தின விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை நடத்தும் திருவள்ளுவர் தின விழாவும் 2023 ஆம் ஆண்டுக்கான கல்விச் சகாயநிதி பெற்றுக் கொள்ளலும் எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9 மணிக்கு கோண்டாவில் கிழக்கு நராய ணன் வீதியில் உள்ள க.கதீ ஸின் இல்லத்தில் மகாசபைத் தலைவர் நாகன் கிருஷ்ண பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பை வீழ்த்தியது ஜப்னா கிங்ஸ்

லங்கா பிரீமியர் லீக் இருபது-20 தொடரின் 13 ஆவது லீக் போட்டியில், லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கண்டி பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணியும் கொழும்பு ஸ்ட்ரைக்கஸ் அணி பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு ஸ்ட்ரைக்கஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ட்ரைக்கஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 146 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.



இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக பெத்தும் நிஸங்க 36 ஓட்டங்களையும் மொஹமட் நவாஸ் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணியின் பந்து வீச்சில், டில்ஷான் மதுஷங்க மற்றும் துனித் வெல்லாலகே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மகேஷ் தீக்ஷன, நுவான் துசார மற்றும் சொயிப் மாலிக் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 147 என்ற வெற்றி இலக்கை நோக்கி லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணி 14.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக நிஷான் மதுஷ்க 46 ஓட்டங்களையும் ரஹமனுல்லா குர்பாஸ் 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொழும்பு ஸ்ட்ரைக்கஸ் அணியின் பந்துவீச்சில் நஷிம் ஷா 2 விக்கெட்டுகளையும் மதீஷ பத்திரன மற்றும் லக்ஷான் சந்தகான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். (4)

# லங்கா பிரீமியர் லீக் தொடர் கண்டி அணி ஹட்ரிக் வெற்றி



லங்கா பிரீமியர் லீக் இருபது-20 தொடரின் 12 ஆவது லீக் போட்டியில், 89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இது அந்த அணியின் சொந்த மைதானத்தில் தொடர்ச்சியான மூன்றாவது வெற்றியாகும்.

கண்டி பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அணி முதலில் காலி டைடன்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பி-லவ் கண்டி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 203 ஓட்டங்களை பெற்றுக் கொண் டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக வனிந்து ஹசரங்க 64 ஓட்டங்களையும் பகர் சமான் 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

காலி டைடன்ஸ் அணியின் பந்துவீச்சில், லஹிரு சமரகோன் 2 விக்கெட்டுகளையும் கசுன் ராஜித, நகராவா மற்றும் சம்ஷி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 204 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி, பதிலுக்கு களமிறங்கிய காலி டைடன்ஸ் அணி, 16.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் கண்டி அணி 89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக வனிந்து ஹசரங்க தெரிவு செய்யப்பட்டார். (4)

# இருபது-20 போட்டிகளில் குல்தீப் யாதவ் சாதனை



வெஸ்ட் இண்டீஸ், இந்தியா இடையிலான 3 ஆவது இருபது-20போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 159 ரன்கள் எடுத்தது. இந்தியா சார்பில் குல்தீப் யாதவ் 3 விக்கெட் வீழ்த்தினார். அடுத்து ஆடிய இந்தியா சூர்யகுமார் யாதவ் அதிரடியால் 17.5 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 164 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக சூர்யகுமார் யாதவ் தேர்வு செய்யப்பட்டார். இந்நிலையில், குல்தீப்யாதவ் சர்வதேச இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் அதிவேகமாக 50 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய பவுலர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

குல்தீப் யாதவ் 30 போட்டிகளில் விளையாடி 50 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். முன்னதாக, சஹல் 34 போட்டிகளில் 50 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

சர்வதேச இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் அதிவேகமாக 50 விக்கெட்டுகளை வீழ்த்தியவர்களில் இலங்கையின் அஜந்தா மெண்டிஸ் (26 போட்டிகள்) முதலிடத்தில் உள்ளார். இரண்டாம் இடத்தை ஹசரங்கா (30 போட்டிகள்) உடன் குல்தீப் யாதவ் பகிர்ந்து கொண்டார். (4)

## சூரியகுமார் அதிரடி

# 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி



வெஸ்ட் இண்டீஸ், இந்தியா இடையிலான 3-ஆவது இருபது -20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 159 ரன்கள் எடுத்தது. பிராண்டன் கிங் 42 ரன்கள் எடுத்தார்.

அதிரடியாக ஆடிய கப்டன் ரோவ் மென் பாவெல் 19 பந்தில் 40 ரன்கள் குவித்தார். இந்தியா சார்பில் குல்தீப் யாதவ் 3 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து, இந்திய அணி 160 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் ஜெய்ஸ்வால் ஒரு ரன்னிலும், சுப்மன் கில் 6 ரன்னிலும் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தனர்.

இதனால் இந்தியா 34 ரன்களுக்கு 2 விக்கெட் இழந்து திணறியது. அடுத்து இறங்கிய சூர்யகுமார் யாதவ் தொடக்கம் முதலே அதிரடியாக ஆடினார்.

கிடைத்த பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினார். அவருக்கு திலக் வர்மா நன்கு ஒத்துழைப்பு கொடுத்தார். அதிரடியாக ஆடிய சூர்யகுமார் அரை சதம் கடந்தார். 3வது விக்கெட்டுக்கு இணைந்த சூர்யகுமார் யாதவ் - திலக் வர்மா ஜோடி 87 ரன்கள் சேர்த்தது. சிறப்பாக ஆடிய சூர்யகுமார் யாதவ் 44 பந்தில் 4 சிக்சர், 10 பவுண்டரிகள் உட்பட 83 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய கப்டன் ஹர்திக் பாண்ட்யா, திலக் வர்மாவுடன் இணைந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில், இந்தியா 3 விக்கெட்டுக்கு 164 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. திலக் வர்மா 49 ரன்னும், பாண்ட்யா 20 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். இந்த வெற்றியின் மூலம் இருபது-20 தொடரில் இந்தியா 1-2 என பின்தங்கியுள்ளது.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கடத்த முயன்ற 1250 கிலோ பீடி இலைகள் பறிமுதல்

## தமிழகத்தில் 6 பேர் கைது

(சென்னை)

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த இருந்த 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 1250 கிலோ பீடி இலைகளை பறிமுதல் செய்த பொலிஸார், கடத்தலில் ஈடுபட்ட 6 பேரை கைது செய்தனர்.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம், வேம்பார் கடற்கரை பகுதியில் இருந்து இலங்கைக்கு படகு மூலம் பீடி இலைகள் கடத்தப்படவிருப்பதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து பொலிஸார் கடற்கரையோர பகுதிகளில் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை வேம்பார் கலைஞானபுரம் கடற்கரையை நோக்கி வேகமாக வந்த 'டாட்டா ஏஸ்' சரக்கு வானை நிறுத்தி சோதனை செய்தனர். அதில், சுமார் 40 பண்டல்களில் 1250 கிலோ பீடி இலைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இந்த பீடி இலைகள் படகு மூலம் திருட்டுத்தனமாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்தமை தெரியவந்தது. இதையடுத்து பீடி இலைகள் மற்றும் சரக்கு வாகனத்தை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

அத்தோடு தமிழ்நாட்டை சேர்ந்த 6 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (நி-5)

# பிறந்த சிசுவைக்கொன்று வீதியில் வீசிய ஜோடி

(கொழும்பு)

பிறந்த சிசுவை உடனடியாக வீதிக்கு கொண்டு வந்து கொன்று வீசிய கணவன் மனைவியை முல்லேரியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண், பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அக்குழந்தையின் தந்தையென கூறப்படும் நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

முல்லேரியா பண்டார மாவத்தை களனிமுல்ல தெருவில் உள்ள அவரது வீட்டில் நேற்று முன்தினம் இரவு சிசுவை பெற்றெடுத்துள்ளதுடன், சிசுவை கொன்று வீதிக்கு கொண்டு வீசியுள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கிடமான கணவனும் மனைவியும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



கடந்த 22.07.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## ஐயாமுத்து சிவராசா

(ஓய்வு பெற்ற கணித ஆசிரியரும் கருணாலய ஆண்கள் இல்ல முகாமையாளரும்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று 10.08.2023 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

"ஸ்ரீ ரஞ்சனி வாசம்"
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(15660)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 10 அராலி வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 50A ஆதனத்தின் ஆதனப் பெயரானது எமது ஆதனப் பதிவேட்டில் சொந்தக்காரர் எனப் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், நீர்வேலியைச் சேர்ந்த திருவாளர் இரத்தினசிங்கம் என்பவர் யாழ். நொத்தாரிசு ஜனாப் M.M.மன்சூர் என்பவர் முகதாவில் 1989 ஆம் ஆண்டு நிறைவேறிய அறுதி உறுதியுத்தம் காரணமாக பதிவு செய்யப்படவில்லை.

குறித்த ஆதனம் இலக்கம் 153/14, நாவலர் வீதி,யாழ்ப்பாணம் தற்பொழுது இல 257/1 C, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு சேகு பரீத் முகம்மதுசா பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் 2004.09.10 ஆம் திகதி 788 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்துகை உறுதிப்படி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பாம்படி மயிலன் புங்கடியும் நெற்பரப்பு மூன்று (நெ.ப.3) என தனக்குரியது என வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பாம்படி மயிலன் புங்கடியும் இராசாளிக்குளங்கரையும் நெற்பரப்பு மூன்று (நெ.ப.3) ம் சேதமடைந்த இரண்டு கிணறுகளும்.

இதற்கு எல்லைகள் :-

| | | |
|---|---|---|
| கிழக்கு | : | கந்தையா சூரியகுமாரின் (சூரியகுமாரன்) ஆதனம். |
| வடக்கு | : | கந்தையா சூரியகுமாரின் (சூரியகுமாரன்) ஆதனம். |
| மேற்கு | : | எட்டி அகல (8') பாதை நிலம். |
| தெற்கு | : | அராலி வீதி |

இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

தற்போது இவ்வாதனத்தை சேகு பரீத் முகம்மதுசா என்பவர் தனது பெயரை எமது ஆதனப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சேகு பரீத் முகம்மதுசா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C-7038)

# இராசிபலன்

10.08.2023
ஆடி 25, வியாழக்கிழமை
நவமி முற்பகல் 8.57 மணிவரை

கார்த்திகை முற்பகல் 7.43 மணிவரை
சுபநேரம் -7.34-9.04 மணிவரை
இராகுகாலம்-1.34-3.04 மணிவரை

சந்திராஷ்டமம்- சுவாதி.

வளவன்




துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உடல் நலன் பற்றிய கவலைகள் உருவாகி மறையும்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.





பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் சிறு மாற்றம் செய்ய முற்படுவீர்கள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சிறப்பான நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பொதுவாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.




குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ரோக பயமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள், வருங்காலம் பற்றி சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

சுவாசிக்கும் எண்ணங்களே பேசும் வார்த்தைகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்திற்கு பாராளுமன்றம் மூலமே தீர்வு

## இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட

**(டில்லி)**

**இலங்கை ஜனாதிபதியின் சமீபத்தைய இந்திய விஜயம் இருநாடுகளுக்கும் இடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இலங்கை இந்தியாவின் பாதுகாப்பை தனது பாதுகாப்பாக இலங்கை கருதுகின்றது எனவும் டைம்ஸ் ஒவ் இந்தியாவிற்கு இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட இதனை தெரிவித்துள்ளார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில்

இலங்கை ஜனாதிபதியின் விஜயத்தின்போது பூகோள அரசியல் மற்றும் மூலோபாய அரசியல் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இந்தியாவின் பாதுகாப்பே எங்களின் பாதுகாப்பு எங்கள் மத்தியில் நீண்ட கால நாகரீக உறவுகள் காணப்படுகின்றன. நாங்கள் ஒரே இரத்தத்தை கொண்டுள்ளோம் எனவும் தெரிவித்துள்ள அவர் இரு நாடுகளுக்கும் இடையில் அதிக தொடர் பாடல்களும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயற்பாடுகளும் இடம் பெற்றுள்ளன. அவை இலங்கை ஜனாதிபதியின் விஜயத்தினால் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

13 ஆவது திருத்தம் குறித்த இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு குறித்து எந்த சந்தேகமும் இல்லை.எனினும் இதற்கு பாராளுமன்றம் மூலமே தீர்வைக் காண முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைநல்லிணக்கம் குறித்த ஆர்வத்துடன் உள்ளது. ஜனாதிபதி தொடர்புபட்ட அனைவருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். இலங்கை ஆழமாக துருவமயப்படுத்தப்பட்டுள்ள சமூகம் பாராளுமன்றம் மூலமே தீர்வை காண முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் மரத்துடன் மோதி விபத்து

### இளம் தம்பதியர் உயிரிழப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் - இராஜாங்கனைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இளம் தம்பதியினர் பயணித்த ஹயஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் அருகில் இருந்த மரத்துடன் மோதியுள்ளது.

இதன்போது ஹயஸ் வாகனத்தைச் செலுத்திச் சென்ற 28 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

படுகாயங்களுடன் நோயாளர் காவுகை வாகனத்தில் இராஜாங்கனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 26 வயதுடைய மனைவி இடைவழியில் உயிரிழந்துள்ளார்.

இருவரினதும் சடலங்களும் இராஜாங்கனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த இளம் தம்பதியினர் அநுராதபுரம் - பலு கஸ்வெவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி-5)

## ஜனாதிபதி சிறந்த முடிவுகளை எடுத்தால் ஆதரவு- சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதி சிறந்த முடிவுகளை எடுத்தால், எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று எந்தவொரு மாகாண சபைக்கும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை . இந்த நிலையில், 13 ஐ யாருக்காக நாம் நிறைவேற்றப் போகிறோம் தேர்தலுக்கு தற்போது நாட்டில் இடமில்லை . சர்வகட்சி மாநாட்டின் போது நாம் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தினோம்.

மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும். 2 மாகாணங்களுக்கும் மட்டுமன்றி, 9 மாகாணங்களுக்கும் தேர்தலை நடத்த முன்வர வேண்டும். மக்கள் ஆணை கிடைத்தவுடன், மாகாண சபைக்கான உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு, 13 தொடர்பாக கலந்துரையாட முடியும்.134 பேரின் ஆணையுடன்தான் ஜனாதிபதி பாராளுமன்றில் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதிக்கு கீழ் தான் அமைச்சரவை உள்ளது.எனவே . தனக்கு பெரும்பான்மை இல்லை என்று ஜனாதிபதி கூறமுடியாது என அவர் தெரிவித்தார். (நி-5)

## மீரிகம பகுதியில் கொள்கலன்-ரயில் விபத்து



(கொழும்பு)

மீரிகம - வில்வத்தை பகுதியில் கொள்கலனொன்று ரயிலுடன் மோதியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த விபத்து நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. கொள்கலன் பொல்கஹவெலயில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த 'பௌஃபி கர்லயால' புகையிரதத்துடன் மோதியுள்ளது.

இதனால் வடக்கு மற்றும் மலையக ரயில் மார்க்கங்களில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)


45 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



கடந்த 27.06.2023 (செவ்வாய்க்கிழமை) சிவபதமடைந்த எங்கள் ஒளி விளக்கு

அமரர். சிவகுமார் தர்சன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.08.2023) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

(சி-7040)

இளங்கோபுரம் தோரவில், வல்வை.


இங்ஙனம் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு யோசனையை

## எந்தவொரு நீதிமன்றிலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது

## சபாநாயகர் மஹிந்த யாப்பா



(கொழும்பு)

உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பதற்காக செயற்படுத்தப்படும் யோசனையை எந்தவொரு நீதிமன்றத்திலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்திற்கு நேற்று தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நடைமுறையைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு எதிராக, எந்தவொரு வகையிலும் உத்தரவு அல்லது தீர்ப்பை வழங்குவதற்கு இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்டுள்ள எந்தவொரு நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை என சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான எந்தவொரு உத்தரவு அல்லது நீதிமன்ற தீர்ப்பும் அரசியல்மைப்பு மீறலாக அமையும் என சபாநாயகர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் 148 ஆவது பிரிவிற்கு அமைய, அரச நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்தின் வசம் காணப்படுவதாக சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டமானது அமைச்சரவையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்ற அரச நிதி தொடர்பான செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 2023 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி பாராளுமன்றத்தில் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் நினைவுபடுத்தினார்.

அதற்கமைய, குறித்த யோசனையானது உயர்நீதிமன்றத்தில் அல்லது 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட வேறு எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரணைக்குட்படுத்த, மறுபரிசீலனை செய்ய அல்லது சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாது என்பது சபாநாயகரின் நிலைப்பாடாகும்.

பாராளுமன்ற செயற்பாடுகளை கேள்விக்குட்படுத்த அல்லது தலையீடு செய்ய நீதிமன்றத்திற்கு முடியாது என முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க மிகத் தெளிவாக அறிவித்துள்ளதாக சபாநாயகர் குறிப்பிட்டார். (நி-5)


சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




சைவப்புலவர்,சைவசித்தாந்தரத்னம்,
சைவசித்தாந்த பண்டிதர்
திருமதி.
சண்முகவடிவு
தில்லைமணி (SLTS-I)
B.A(Hons) H.Civi.,M.A.Dip. in. Edu)

சேவை விபரம்
19.03.1990-08.01.2012
யா/வீமன்காமம் ம.வி
09.01.2012-09.08.2023
யா/ வட்டு இந்துக் கல்லூரி

எமது கல்லூரியில் பதினொரு வருடங்களாக ஆசிரியராக சிறப்பாக பணியாற்றி 10.08.2023 இல் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி. சண்முகவடிவு தில்லைமணி அவர்கள் ஓய்வுக் காலத்தில் நோய்நொடி இன்றி நலமாக வாழ வேண்டும் என நடராஜப் பெருமானை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.
வாழ்க பல்லாண்டு வாழ்க வளமுடன்.

(16650)

வாழ்த்துவோர்– நலன்புரிக் கழகம்,
யா/ வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.


# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 25 புன்னாலை வீதி, ஆதன இலக்கங்கள் 108, 108 1/1, 110, 110 1/1, 112, 112 1/1, 114 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எஸ். தங்கவேலு, எஸ்.குமாரகுரு, எஸ்.யோககுருவும் மருள்குருவும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இலக்கம் 7964 நன்கொடை உறுதி 30.05.2023 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கே.எஸ்.ஏ மதுரநாயகம் முகதாவில் வரையப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள்-

1)கனடாவைச் சேர்ந்த தங்கவடிவேலு செல்லத்துரை,
2)தங்கவடிவேலு நந்தகுமரன் ஆகியோர் (அற்றோனித்தத்துவக்காரர் சாந்தி அருள்சந்திரன்)மூலமும்
3)கனடாவைச் சேர்ந்த மோகனவேல் திருநாவுக்கரசு (அற்றோனித்தத்துவக்காரர் சாந்தி அருள்சந்திரன்)
4) அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ராஜ்குமார் செந்தில்குமரன்,
5)ராஜ்குமார் சிறீஜெயந்தி (அற்றோனித்தத்துவக்காரர் சாந்தி அருள்சந்திரன்)
6)அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த றட்ணவடிவேல் ரமேஷ் (அற்றோனித்தத்துவக்காரர் சாந்தி அருள்சந்திரன்)
7)வல்வெட்டித்துறையைச் சேர்ந்த யோககுரு ஆனந்தமயில்,
8)வாசுதேவன் நேரு கைம்பெண் மதிவதனி (அற்றோனித்தத்துவக்காரர் செல்வகுரு கைம்பெண் தயாலெட்சுமி)
9)வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பிரபாகரன் கைம்பெண் தேன்மொழி (அற்றோனித்தத்துவக்காரர் செல்வகுரு கைம்பெண் தயாலெட்சுமி) ஆகியோர்,

1ஆம்,2ஆம்,5ஆம்,7ஆம், 8ஆம், 9ஆம் பேர்களின் சகோதரியாக ராஜேந்திரன் பெண் தங்கரெட்ணம் என்பவருக்கு

13.11.1954 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். ஆர். காராளசிங்கம் முகதாவில் 3061 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் 1ஆம், 2 ஆம், பேரின் காலஞ்சென்ற தந்தையாரினதும் 3ஆம், 4ஆம், பேரின் காலஞ்சென்ற பேரனினதும் சொரியலாய் 1/4 பங்கு ஆதனம் சொந்தமானது.

13.11.1954 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். ஆர்.காராளசிங்கம் முகதாவில் 3062ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் 5ஆம் பேரின் காலஞ்சென்ற தந்தையாரினதும் 6 ஆம் பேரின் காலஞ்சென்ற பேரனினதும் சொரியலாய் 1/4 பங்கு ஆதனம்.

13.11.1954ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். ஆர்.காராளசிங்கம் முகதாவில் 3063ம் இலக்க அறுதி உறுதி மூலம் 7ம் பேரின் காலஞ்சென்ற தந்தையாரின் சொரியலாய் 1/4 பங்கு ஆதனம்.

13.11.1954 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். ஆர்.காராளசிங்கம் முகதாவில் 3064 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் 8ஆம்,9ஆம் பேர்களின் காலஞ்சென்ற தந்தையாரின் சொரியலாய் 1/4 பங்கு ஆதனம்.

குறித்த ஆதனத்தை தங்கவடிவேல் செல்லத்துரையும் தங்கவடிவேல் நந்தகுமாரனும் மோகனவேல் திருநாவுக்கரசும் ராஜ்குமார் செந்தில்குமரனும் சாந்தி அருள்சந்திரனும் ரட்ணவடிவேல் ரமேஷ் உம் யோககுரு ஆனந்தமயிலும் வாசுதேவன் நேரு கைம்பெண். மதிவதனியும் பிரபாகரன் கைம்பெண் தேன்மொழியும் 30.05.2023 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு K.S.A மதுரநாயகம் முகதாவில் 7964 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நெற்பரப்பு 2 குளி 08.59 விஸ்தீரண ஆதனத்தை றாஜேந்திரன் பெண் தங்கரெட்ணம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கு இறை. "சோனகன் தறை" பிரதேச செயலாளர் பிரிவு யாழ்ப்பர்ணம், யாழ்ப்பாண மாநகரசபை, கிராமசேவையாளர் பிரிவு J/83.

"சோனகன் தறை" நிலப்பரப்பு 2 1/2 (இரண்டரை). இதில் சொரியலாய் 1/4 பங்கு (இதன் பதிவு D229/115), அவ்வாறே மேற்படி இறை "சோனகன் தறை" நிலப்பரப்பு 2 1/2 (இரண்டரை) இதில் சொரியலாய் 1/4 பங்கு (இதன் பதிவு D229/115), அவ்வாறே மேற்படி இறை "சோனகன் தறை" நிலப்பரப்பு 2 1/2 (இரண்டரை ) இதில் சொரியலாய் 1/4 பங்கு (இதன் பதிவு D229/115), அவ்வாறே மேற்படி இறை "சோனகன் தறை" நிலப்பரப்பு 2 1/2 (இரண்டரை) இதில் சொரியலாய் 1/4 பங்கு (இதன் பதிவு D229/115). இவை நான்கும் ஒருங்கே சேர்ந்து மொத்த நிலப்பரப்பு 2 1/2 (இரண்டரை).ஆனால் இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ரி.தங்கராஜா அவர்களால் 14.11.2022ஆம் திகதி 12871 ஆம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப்படத்தில் லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட துண்டாகிய நிலப்பரப்பு 02 (இரண்டு) குளி 08.59 (சைபர் எட்டு தசம் ஐந்து ஒன்பது) மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

இந்த நிலப்பரப்பு 2 குளி 08.59 இற்கும் எல்லைகள்:

கிழக்கு:கணபதி ஐயர், முது ஐயர், என்பவர்களினதும் பங்குதாரர்களினதும் ஆதனம்.
வடக்கு: வண்ணார்பண்ணை கதிரேசன் கோயில் ஆதனம்.
மேற்கு: சோமசுந்தர ஐயர் பெண் இரட்ணாம்பிகை அம்மாவின் ஆதனம்.
தெற்கு: றோட் (மானிப்பாயிலிருந்து கே.கே.எஸ். செல்லும்) இதலடங்களும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது ராஜேந்திரன் பெண் தங்கரெட்ணம் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது றாஜேந்திரம் பெண் தங்கரெட்ணம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம். (சி-7039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 176

### உதவிக்கரம் நீட்டல்



ஒரு முறை ஒரு குதிரை வீரன் தனது குதிரையில் பாலைவனத்தில் பயணித்துக் கொண்டிருந்தான். அப்போது தாகத்தால் தவித்த ஒருவனை கண்டு குதிரையை நிறுத்தினான். தண்ணீர் கொடுத்ததும் குடித்துவிட்டு அவன் சற்று அமைதியானான்.

"நீ ஏதோ கேட்க வெட்கப்படுகிறாய், நான் வேண்டுமானால் உன்னை நீ போக வேண்டிய இடத்திற்கு கொண்டுபோய் சேர்க்கட்டுமா? என்றான்.

"உங்கள் தாராள மனதுக்கு மிக்க நன்றி, நானும் உதவி கேட்கலாம், என்றுதான் இருந்தேன் ஆனால் வெட்கமாக இருந்தது" என்றான்.

குதிரை வீரன் சிரித்தவாறே, ஏறுங்கள் என்றான். அவன் ஏற முயன்ற போது அவனால் ஏற முடியவில்லை.நான் ஒரு உழவன்.குதிரை மீது ஏறி எனக்கு பழக்கம் இல்லை என்றான்.

குதிரை வீரன் கீழே இறங்கி அவன் ஏறி அமர உதவி புரிந்தான். குதிரை மீது அவன் ஏறியவுடன், தேர்ச்சி பெற்ற குதிரை வீரனாக குதிரை மீது தட்டி வேகமாக அவன் பாட்டில் நகரத் தொடங்கினான்.

தலையில் கையை வைத்த குதிரை வீரன், தான் ஒரு பெரும் கொள்ளைக்காரனிடம்

சிக்கியது தெரியவந்தது.

"தயவு செய்து நான் சொல்வதை ஒரு விநாடி கேட்டுவிட்டு செல் என்று சப்தமிட்டான்.

"இவனது அழைப்பு சற்று வித்தியாசமாக இருக்கிறது என்று திருடன் திரும்பிப் பார்த்து என்ன விடயம் சொல் என்றான்.

தயவு செய்து இந்த விடயத்தை ஊரில் யாரிடமும் சொல்லிவிடாதே என்று கெஞ்சினான்.

"ஏன் குதிரை வீரன் என்ற உன் நற்பெயர் கெட்டுவிடும் என்று பயப்படுகிறாயா? என்று கேட்டான்.

"இல்லை, மக்களிடையே ஒருவருகொருவர் உதவிக்கரம் நீட்டுவது நின்று விடும் என்று அஞ்சுகிறேன்" என்றான்.

கன்னத்தில் ஒரு அறை விழுந்தவன் போல், திருடன் குதிரையை விட்டு இறங்கி நடையை கட்டினான்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## உக்ரைன் டிரோன்களை வீழ்த்திய ரஷ்யா



(மொஸ்கோ)

ரஷ்ய- உக்ரைன் போர் தற்போது சுமார் 530 நாட்களை கடந்து நடைபெற்று வருகிறது. இரு நாடுகளும் ஆளில்லா விமானங்களை அதிகளவில் பயன்படுத்து கின்றன. ரஷ்யா, தனது அண்டை நாடான உக்ரைனை 2022, பெப்ரவரி மாதம் தனது இராணுவத்தால் ஆக்கிரமித்தது.

சிறப்பு இராணுவ நடவடிக்கை என பெயரிட்டு ரஷ்யா மேற்கொண்ட இந்த ஆக்கிரமிப்பிற்கு எதிர்வினையாக உக்ரைன், அமெரிக்கா உட்பட பல மேற்கத்தேய நாடுகளின் பொருளாதார மற்றும் ஆயுத உதவிகளை கொண்டு ரஷ்யாவை தீவிரமாக எதிர்த்து வருகிறது.

இந்த ரஷ்ய-உக்ரைன் போர் தற்போது சுமார் 530 நாட்களை கடந்து நடைபெற்று வருகிறது. இதில் இரு தரப்பிலும் வீடுகளும், கட்டிடங்களும் சேதமடைந்து பல அப்பாவி பொது மக்கள் கொல்லப்படுவது தொடர்கதையாகி வருகிறது. சில மாதங்களாக தாக்குதல்களில் இரு நாடுகளும் டிரோன் எனப்படும் ஆளில்லா விமானங்களை அதிகளவில் பயன்படுத்துகின்றன.

இந்நிலையில் உக்ரைன் இரு டிரோன்களை ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவை நோக்கி ஏவியது. இவற்றை ரஷ்யாவின் விமானப்படை தாக்கி அழித்தது.

மொஸ்கோவின் தெற்கு புறநகரில் உள்ள டொமோடிடோவோ பகுதியின் மீது ஏவப்பட்ட ஒரு டிரோனை ரஷ்யா இடைமறித்து வீழ்த்தியது. தலைநகரின் மேற்கு பகுதியில் உள்ள மின்ஸ்க் நெடுஞ்சாலையின் மேலே இன்னொரு டிரோனை ரஷியா இடைமறித்து வீழ்த்தியது. ரஷ்யாவின் மொஸ்கோ நகரை குறிவைத்து ஒரே வாரத்தில் 3ஆவது முறையாக உக்ரைன் தாக்குதல் நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## அமெரிக்

## 10 மாகா

❖ 2 பேர்
❖ 2600
❖ இலட்சக்

(வோஷிங்டன்)
மத்திய அட்லா
கனமழை காரண
பாதிக்கப்பட்டுள்

மத்திய-அட்லாண்டிக் பெருங் கடலில் உருவான சூறாவளி அமெரிக்காவின் தலைநகர் வோஷிங்டன், நியூயார்க், டென்னிசி, பிலடெல்பியா, அரிசோனா, நியூமெக்சிகோ உட்பட 10 மாகாணங்களைத் தாக்கியது.

இந்த பலத்த சூறாவளி காற்று காரணமாக மரங்கள், மின் கம்பங்கள் சரிந்து விழுந்ததோடு


## இணைய தாக் இங்கிலாந்தி

(லண்டன்)

இங்கிலாந்தின் தேர்தல் ஆணையம் இணைய தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

மின்னஞ்சல் கட்டுப்பாட்டு அமைப்புகள், மற்றும் தேர் தல் பதிவேடுகளின் நகல்கள் அணுகப்பட்டதாக

## டெஸ்லா நிறுவனத்தின் அதிகாரியாக இந்திய வம்சாவளி நபர் நியமனம்



(டில்லி)

அமெரிக்க நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் அண்மைக் காலமாக இந்தி

வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், உலகின் முன்னணி கார் உற்பத்தி நிறுவனமான டெஸ்லாவில், இந்திய வம்சாவழி நபரான 45 வயதான வைபவ் தனேஜா தலைமை நிதி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அந்த பொறுப்பில் உள்ள சச்சரி கிர்கோர்ன் தனது பதவியை ராஜினாமா செய்ததால் வைபவுக்கு இந்த பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் டில்லி பல் கலைக் கழகத்தில் வணிகவி யல் பட்டம் பெற்றுள்ள வைப வுக்கு கணக்கியல் துறையில் 20 ஆண்டுகள் அனுபவம் உள்ளது.

மேலும் இவர் தொழில் நுட்பம், சில்லறை வணிகம் மற்றும் தொலைத் தொடர்பு தொடர்பான பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிக்காவை அதிர வைத்த சூறாவளி

# காணங்கள் கடுமையாக பாதிப்பு

## உயிரிழப்பு
## விமானங்கள் ரத்து
## சக்கணக்கான வீடுகள் இருளில்

டன்)

ட்லாண்டிக் பெருங்கடலில் உருவான சூறாவளி மற்றும் ரணமாக அமெரிக்காவின் 10 மாகாணங்கள் கடுமையாக டுள்ளன.





மேலும், கனமழை காரணமாக பல இடங்களில் வெள்ளம் சூழ்ந்தது.

இந்த புயலால் பெரும்பாலான இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இதனால் லட்சக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கின. புயலின் போது மின்னல் தாக்கியும் மரம் விழுந்தும் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

தலைநகர் வோஷிங்டனில் புயல் தாக்கத்தால் அரசு அலுவலகங்கள் மூடப்பட்டன.

மேலும் தேசிய உயிரியல் பூங்கா, நூலகங்கள், அருங்காட்சியகங்களும் மூடப்பட்டன.

புயல்-கனமழை காரணமாக அமெரிக்காவில் விமான சேவையும் கடுமையாக பாதிக்கப்பட்டது.

2,600 இற்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாக வந்தன. புயல், வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-5)

## ாக்குதலுக்கு இலக்காகிய
## தின் தேர்தல் ஆணையம்

தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் கடந்த 2014 மற்றும் 2022இற்கு இடையில் வாக்களிக்க பதிவு செய்தவர்களின் பெயர் மற்றும் முகவரி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் வெளிப்புற பாதுகாப்பு நிபுணர்கள் மற்றும் சைபர் பாதுகாப்பு மையுத்துடன் பணியாற்றியுள்ளதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)

## தேர்தலில் போட்டியிட இம்ரான்கானுக்கு தடை விதித்தது பாகிஸ்தான் உயர்நீதிமன்றம்

(இஸ்லாமாபாத்)

அண்மையில் ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை அதிக பாதுகாப்பு மிக்க அடியாலா சிறைக்கு மாற்ற உத்தர விடக் கோரி இஸ்லாமாத் உயர்நீதி மன்றத்தில் அவரது தலைமையிலான தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சி மனு தாக்கல் செய்யப்பட்டது.



இது தொடர்பாக தேர்தல் ஆணையம் தொடுத்த வழக்கில், இம்ரான் கானை குற்றவாளி என்று இஸ்லாமாபாத் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.

அத்துடன் அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை, ரூ.1 லட்சம் அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

அப்போது இம்ரான் கானை இஸ்லாமாபாத் பொலிஸ் பிரிவு கைது செய்ய வேண்டும். பஞ்சாப் மாகாணத்தில் உள்ள அடியாலா சிறையில் அடைக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

நேற்று இம்ரான்கான் மீதான குற்றம் உறுதி செய்யப்பட்டு அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து இஸ்லாமாபாத் செசன்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட அவர், பஞ்சாப் மாகாணம் அட்டோக் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகள் தடை விதித்து அந்நாட்டு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வியை தழுவிய இம்ரான்கான் பிரதமர் பதவியை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## காரை வீட்டின் இரண்டாம் மாடியில் மோதியவர் மருத்துவமனையில்

(வோஷிங்டன்)



அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் ஒருவர் தமது காரை ஒரு வீட்டின் இரண்டாம் மாடியில் மோதியதாக பி.பி.சி தெரிவித்தது.

விசாரணையின் போது அவர் அதை வேண்டுமென்றே செய்ததாக அதிகாரிகள் அறிந்தனர். சாம்பல் நிறக் கார் ஒன்று வீட்டின் இரண்டாம் மாடியில் சிக்கிக்கொண்டிருப்பதைச் சம்பவம் குறித்தப் படங்கள் காட்டுகின்றன.

சம்பவம் நிகழ்ந்த போது வீட்டில் மூன்று பேர் வரை இருந்தனர். அவர்களுக்குக் காயம் ஏற்படவில்லை என்று பி.பி.சி தெரிவித்தது. கார் ஓட்டுநர் வீட்டின் கூரையின் மீது ஏறிக் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

வீட்டின் இடது பக்கத்தில் சாலையின் கீழ் இருந்த சுரங்கக் கால்வாய்க்குள் வேகமாகச் சென்ற கார் காற்றில் பறந்து வீட்டின் இரண்டாம் மாடியில் மோதியது. சம்பவத்தின் தொடர்பில் கார் ஓட்டுநர் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்குவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 300 | 400 |
| தக்காளி | 200 | 250 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 240 | 200 | 300 |
| கோவா | 250 | 280 | 250 | 280 |
| கரட் | 360 | 540 | 500 | 550 |
| பூசணி | 100 | 120 | 120 | 120 |
| புடோல் | 80 | 70 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 180 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 220 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 130 | 150 | 140 |
| பாகற்காய் | 350 | 300 | 300 | 200 |
| வெண்டக்காய் | 80 | 70 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 170 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 250 | 200 | 240 | 250 |
| பீற்றூட் | 160 | 180 | 120 | 160 |
| கறிமிளகாய் | 350 | 400 | 350 | 350 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 250 | 200 |
| போஞ்சி | 450 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 70 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 300 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 350 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 120 | 160 | 80 | 100 |

## சம்பந்தன் எம்.பி-கிழக்கு ஆளுநர் திடீர் சந்திப்பு



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனுடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பந்தனை நேற்று முன்தினம் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மரியாதை நிமிர்த்தம் சந்தித்து, கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## கௌரவ பட்டம் வழங்குவது தொடர்பான சட்டத்தில் திருத்தம்

### கல்வி அமைச்சர் சுசில்



(கொழும்பு)

கௌரவ நாமம், கௌரவ பட்டங்களை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஜனாதிபதிக்கு மாத்திரமே சட்ட ரீதியில் அனுமதி இருக்கிறது.

வேறு நிறுவனங்கள் இவ்வாறான விருதுகளை வழங்குவதற்கு எந்த சட்ட ஏற்பாடுகளும் இல்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது புத்திக்க பத்திரண எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

புத்திக்க பத்திரண எம்.பி. குறிப்பிடுகையில்,

பேராசிரியர், டாக்டர், கலாநிதி, வித்தியாஜோதி, வித்தியாகீர்த்தி, தேசபந்து, தேசகீர்த்தி, தேசமான்ய, விஷ்வகீர்த்தி மற்றும் தேசசக்தி போன்ற கௌரவ நாமங்கள் கௌரவ பட்டங்களை, பதவிகளை அளிப்பதற்கு அதிகாரம் கொண்டுள்ள அரச நிறுவனங்கள் யாவை என கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

கௌரவ நாமங்கள் கௌரவ பட்டங்களை, பதவிகளை அளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஜனாதிபதியினால் மாத்திரமே சட்ட ரீதியில் அனுமதி இருக்கிறது.

பல்கலைக்கழகம் ஒன்று இவ்வாறான பதவி வழங்குவதாக இருந்தால் அது தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடைமுறை விதிகள் அடங்கிய சுற்று நிருபம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருக்கிறது.

அதேபோன்று ஜனாதிபதியினால் பிரஜைகளுக்கு இவ்வாறான விருது வழங்க முடியும். இது தொடர்பில் சட்டம் இருக்கிறது. அவ்வாறு விருது வழங்குவதாக இருந்தால், அதற்காக பகிரங்க விண்ணப்பம் கோரி, அதனை அமைக்கப்படும் நிபுணர்கள் குழுவினால் பரீட்சித்து பார்த்து அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறைகள் இருக்கின்றன என அவர் தெரிவித்தார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2886

**நிவேதா**




**கனுசிகா**




**டினு**




**டிலான்**




**யதுசன்**




**யசோபிகா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் அனுமதி இன்றி சிங்களவர்கள் மீன்பிடி தொழில்

## வாடிகளை அகற்றுமாறு உத்தரவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் அனுமதியின்றி தொழில் செய்ததால் பெரும்பான்மையின மீனவர்கள் புதிதாக அமைத்த வாடியினை அகற்றுமாறு அப்பகுதிக்கு சென்ற கிராம சேவையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.


முல்லைத்தீவு நாயாற்று பகுதிக்கு தெற்கே உள்ள புலிபாய்ந்தகல் என்ற இடத்தில் சிங்கள மக்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் நேற்று முன்தினம் கொக்குத்தொடுவாய் கடற்றொழில் சங்க அங்கத்தவர்கள், நிர்வாகத்தினரும் நாயாறு கடற்றொழில் சங்க நிர்வாகத்தினரும் (செம்மலை கிழக்கு) குறித்த இடத்திற்கு சென்று பார்வையிட்ட போது புதிதாக ஒரு வாடி அமைக்கப்பட்டிருப்பதாக அறிவித்தல் வழங்கப்பட்டமையடுத்து நேற்று குறித்த இடத்திற்கு மீனவர் சங்க உறுப்பினர்களும் கொக்குத்தொடுவாய் கிழக்கு கிராம அலுவலரும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனும் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டனர்.

குறித்த இடத்திற்கு 18 இற்கு மேற்பட்ட சிங்கள மீனவர்களும் நான்கு படகுகளுடனும் தொழில் செய்ய வந்திருப்பதும் அரிச்சந்திரன் எனும் பெயரிலையே கடற்றொழில் திணைக்களத்திற்கு கடிதம் வழங்கப்பட்டிருந்ததும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த சிங்கள மீனவர்கள் தமக்கு கடற்றொழில் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டதாக கூறி கடிதத்தை காண்பித்தனர்.

ஆனால் பிரதேச செயலாளரால் இதுவரை அனுமதி வழங்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டு அவ்விடயத்தினை குறித்த சிங்கள மீனவர்களுக்கு தெளிவுபடுத்தி பிரதேச செயலகத்தில் நீங்கள் அனுமதி பெற வேண்டும் அனுமதி இல்லாததனால் புதிதாக அமைக்கப்பட்ட வாடி அகற்றப்பட வேண்டும் எனவும் கிராம சேவையாளர் கூறியிருந்தார். அது தவறினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறித்த நபர்களுக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-299)

# வீதியை புனரமைக்க கோரி பொதுமக்கள் போராட்டம்



(தருமபுரம்)

கிளிநொச்சி பல்லவராஜன் கட்டு கிராஞ்சி ஊடாக வலைப்பாடு செல்லும் வீதியை புனரமைத்து தருமாறு கிராஞ்சி மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

முற்பகல் 10.30 மணிக்கு கிராஞ்சி அந்தோனியார் ஆலயத்திலிருந்து பேரணியாக சென்று கிராஞ்சி பொதுச்சந்தை வரை போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த வீதி புனரமைப்பதற்கான பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டாலும் இடையிலே கைவிடப்பட்டிருக்கிறது .

பல வருட காலமாக அபிவிருத்தி இன்றி போக்குவரத்து செய்வதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக போராட்டத்தின் போது மக்கள் தெரிவித்தனர். (4-5-316)

# வவுனியா பண்ணை எவருக்கும் இல்லை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா அரச விதை உற்பத்தியின் பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லை என வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா குடிமக்கள் பேரவை வவுனியா அரச விதை உற்பத்தி பண்ணையை வேறு தேவைகளுக்காக பயன்படுத்துவதை தடுக்க கோரியும் அவ்வாறான திட்டமிருக்கும் பட்சத்தில் அதனை கைவிடுமாறும் வடமாகாண ஆளுநருக்கு கடிதம் மூலமாக தெரியப்படுத்தியிருந்தது.

இதற்கு பதிலளித்துள்ள உதவி காணி ஆணையாளர் க.சிவப்பிரியா வவுனியா அரச பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லை என வடக்கு ஆளுநர் தெரிவித்துள்ளதாக குடிமக்கள் பேரவைக்கு தெரியப்படுத்தியுள்ளார். (4-5-250)

# சீமெந்து தொழிற்சாலைக்கு எதிர்ப்பு பொன்னாவெளியில் தொடர் போராட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி சீமெந்து தொழிற்சாலைக்கு எதிரான மக்கள் போராட்டம் நேற்று 7 ஆவது நாளாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து மக்கள் ஒன்றியத்தால் மூன்று கிராமங்களான வேரவில், வலைப்பாடு,கிராஞ்சி ஆகிய கிராமங்கள் இனைந்து சீமெந்து தொழிற்சாலைக்கு எதிர்ப்பாக நடத்தும் சுழற்சி முறையிலான கவனயீர்ப்புப் போராட்டத்தின் ஏழாவது நாள் போராட்டமானது வேரவில் வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்றது.



பொன்னாவெளி எனும் பழைமை வாய்ந்த கிராமத்தில் சீமெந்து தொழிற்சாலைக்கான சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு டோக்கியோ சீமெந்து நிறுவனம் ஆய்வுகளை மேற்கொண்டு பணிகளை முன்னெடுக்கவுள்ள நிலையில் பொதுமக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த வாரம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக சுழற்சி முறையிலான கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (4-5)

# சட்டவிரோத மணல் அகழ்வால் சின்னாபின்னமாகும் இயக்கச்சி

## கிராம மக்கள் சுட்டிக்காட்டு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி பகுதியானது சட்டவிரோத மணல் அகழ்வோரால் சிதைந்து சின்னாபின்னமாவதாக கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடல் மட்டத்தில் இருந்து வெறும் ஒன்றரை மீற்றர் உயரமே கொண்ட இயக்கச்சி பிரதேசத்தின் ஆற்று சமவெளிப் பகுதிகளில் இருந்து தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கான லோட் மணல் அகழப்பட்டு யாழ்ப்பாணத்தை நோக்கி செல்வதாக கிராம மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மணல் அகழ்வை உடனடியாக தடுக்காவிட்டால் மிக விரைவில் இயக்கச்சி என்ற பாரம்பரிய பிரதேசம் உப்பு தரவயாக மாறி அழிவடையும் எனவும் யாழ் குடாவின் பெரு நிலப்பரப்பானது ஒரு தீவாக மாறி மக்கள் வாழ தகுதியற்ற வறள் நிலப்பகுதியாக மாறும் பேரபாயம் ஏற்படும் எனவும் தெரிவித்திருந்தனர்.

என்வே குறித்த விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு விரைந்து குறித்த மணல் அகழ்வை தடுத்து நிறுத்துமாறு கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (4-5-316)

# மடு பெருந்திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

## மன்.மறைமாவட்ட ஆயர்

(மன்னார்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாதத் திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்ள உள்ள நிலையில் வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சகல ஏற்பாடுகளும்முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆவணித் திருவிழா தொடர்பாகவும் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயும் 2 ஆவது கூட்டம் நேற்று மடு திருத்தல மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மடு திருத்தலத் தின் ஆவணி மாதத் திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்ள உள்ளதாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக உரிய திணைக்களாங்களின் உதவியோடு மடுத் திருத்தலத்திற்கு வரும் மக்களின் தேவைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக நீர்,சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து போன்ற தேவைகளை உரிய திணைக் களங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நவநாள் திருப்பலிகள் இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை வேஸ்பர் ஆராதனையும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இம்முறை திருவிழா திருப்பலியை திருத்தந்தையின் பிரதிநிதி தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட உள்ளது. மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து மடு சந்திக்கான விசேட புகையிரத சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மன்னாரில் இருந்து அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுஎன அவர் மேலும் தெரிவித்தார். (4-5-285)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 252





அப்படி எந்தப் பெண்ணிடமாவது மனம் சென்றால் அவள் கூந்தலைப் பற்றி இழுத்துக் கொண்டு வந்து அந்தப்புரத்தில் சேர்த்து விட்டு வேறு வேலையைப் பார்ப்பார்கள்."

"பார்த்திபா! நந்தினி உண்மையில் அர்ச்சகர் வீட்டுப் பெண் அல்ல. அவளுடைய பிறப்பைக் குறித்து ஏதோ ஓர் இரகசியம் இருக்க வேண்டும்"

"நந்தினி யாருடைய மகளாயிருந்தால் என்ன? அர்ச்சகர் மகளாயிருந்தால் என்ன? அரசர் மகளாயிருந்தால் என்ன? அல்லது அநாதைப் பெண்ணாயிருந்தால் தான் என்ன? அந்த இன்னொரு கிழவர் பெரிய பழுவேட்டரையரைப் பாருங்கள். எங்கேயோ வழியில் அவளைப் பார்த்தார். உடனே இழுத்துக் கொண்டு வந்து எட்டோடு ஒன்பது என்று அந்தப்புரத்தில் அடைத்தார்."

"நண்பா! அதை நினைத்தால் எனக்கு அதிசயமாகத்தான் இருக்கிறது."

"எதை நினைத்தால்? அந்தக் கிழவர் எப்படி இவளுடைய வலையில் சிக்கினார் என்பதைத்தானே?"

"இல்லை, இல்லை ஒரு காலத்தில் என்னைக் காதலித்ததாகச் சொன்னவள், பிறகு வீரபாண்டியனைக் காதலித்து அவன் உயிரைக் காப்பாற்ற முயன்றவள், இந்தத் தொண்டு கிழவரை மணந்து கொள்ள எவ்வாறு சம்மதித்தாள்? அதை நினைத்தால் தான் அதிசயமாயிருக்கிறது."

"எனக்கு அது ஒன்றும் அதிசயமாகத் தோன்றவில்லை, ஐயா! தங்களுடைய செயலை நினைத்தால்தான் அதிசயமாயிருக்கிறது. சோழ குலத்தின் பரம வைரியான பாண்டியன் தோல்வியடைந்ததும் ஓடி ஒளியும் கோழையினும் கோழையானாலும் 'வீர பாண்டியன்' என்று பெயர் சூட்டிக் கொண்டவன் அவனுக்கு அடைக்கலம் கொடுத்து உயிர்ப்பிச்சை கேட்டவளைத் தாங்கள் சும்மா விட்டு விட்டு வந்தீர்களே? அதை எண்ணினால்தான் அதிசயத்திலும் அதிசயமாயிருக்கிறது. ஒன்று அவளையும் அங்கேயே கத்தியால் வெட்டிப் போட்டிருக்க வேண்டும். அதற்கு விருப்பமில்லாவிட்டால் காலையும் கையையும் சேர்த்துக் கட்டிச் சிறைப்படுத்தி வந்திருக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்று செய்யாமல் சும்மா விட்டு விட்டு வந்தீர்களே. இப்போது எனக்குக் கூட ஞாபகம் வருகிறது. அரசே! அந்தக் குடிசையின் வாசலில் தாங்கள் வீரபாண்டியன் உடலைத் தூக்கிக் கொண்டு வந்து போட்டீர்கள். நாங்கள் அனைவரும் வெறிகொண்டவர்களைப் போல் வெற்றி முழக்கம் செய்தோம். அதற்கு நடுவில் குடிசைக்குள்ளேயிருந்து விம்மல் சத்தம் ஒன்று வந்தது. 'அது யார்?' என்று நான் கேட்டேன். 'யாரோ அர்ச்சகர் குடும்பத்துப் பெண்கள். ஏற்கெனவே அவர்கள் பீதியடைந்து கதிகலங்கிப் போயிருக்கிறார்கள். நீங்கள் யாரும் உள்ளே போக வேண்டாம்" என்றீர்கள். வெற்றி வெறியில் இருந்த நாங்களும் அதைப் பொருட்படுத்தவில்லை. உடனே எல்லோருமாக வீரபாண்டியனுடைய தலையை எடுத்துக் கொண்டு கிளம்பினோம். தாங்களும் எங்களுடன் வந்தீர்கள். ஆனால் எங்கள் களிப்பிலும் கொண்டாட்டத்திலும் அவ்வளவாகத் தாங்கள் கலந்து கொள்ளவில்லை. உற்சாகம் குன்றிக் காணப்பட்டீர்கள். நான் காரணம் கேட்டேன். தாங்கள் ஏதோ சமாதானம் சொன்னீர்கள். தங்களுக்கு ஏதேனும் பலமான காயம் பட்டிருக்குமோ என்று நான் சந்தேகித்துக் கேட்டது கூட எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது" என்றான் பார்த்திபேந்திரன்.

"என் உடம்பில் ஒன்றும் காயம்படவில்லை பார்த்திபா. உள்ளத்தில் என்றும் ஆறாத காயம் பட்டு விட்டது. வீரபாண்டியன் படுத்துக் கிடந்த கட்டிலுக்கு முன்னால் வந்து அவள் கைகூப்பி என்னிடம் உயிர்ப்பிச்சை கேட்ட காட்சி என் மனத்தை விட்டு அகலவில்லை. 'ஐயோ! அவள் கேட்டதைக் கொடுக்காமல் போய் விட்டோமே என்று என் மனம் பதைபதைத்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வாயால் சிக்கிய வாண்டு மீன்கள்

ஒரு அடர்ந்த காட்டுக்கு நடுவுல ஒரு குளம் இருந்துச்சு. மீன்கள், நண்டுகள், தவளைகள் என்று எல்லா வகையான நீர் வாழ் இனங்களும் அங்கு மகிழ்ச்சியோடு அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தன. அதுல சமணன், சத்யன் என்ற இரு அழகிய மீன்களும் இருந்தன.

அந்தக் குளத்திலுள்ள மற்ற மீன்களை விட பெரியவை. தம்முடைய அழகிய தோற்றம், அறிவாற்றல் ஆகியவற்றைப் பற்றி அவை இரண்டிற்கும் அதிக பெருமை இருந்துச்சு.



அதே குளத்தில் குஜன் என்ற தவளை தன் மனைவியோடு வசித்து வந்தது. அங்கு மீன்களுக்கும் தவளைகளுக்குமிடையே நல்ல நட்பு இருந்தன. எந்தத் தகராறும் இல்லாமல் அவை நல்லபடியாக வாழ்ந்தன.

ஒருநாள், காட்டுக்குள்ள இருந்த ஆத்துல மீன் பிடித்து விட்டு இரண்டு மீனவர்கள் வந்து கொண்டிருந்த போது அந்தக் குளத்த பார்த்தாங்க. அப்போ மாலைப்பொழுது முடியுர நேரம்.

வழக்கம் போல எல்லா மீன்களும் தவளைகளும் விளையாடிக் கொண்டிருந்தன. சமணன், சத்யன், குஜன் எல்லாரும் மற்றவர்களோடு விளையாட்டில் கலந்து கொண்டன.

குளத்தை விட்டு மேலே எழும்பிக் குதித்து ஒன்றையொன்று துரத்தி விளையாடிக் கொண்டிருந்தன. அந்த அழகிய காட்சியைக் கண்ட மீனவர் இருவரும் மிகவும் ஆச்சர்யப்பட்டனர்.

அங்கேயே நின்று அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்தனர். "அங்க பாரு எவ்வளவு அழகாக இருக்குல்ல எல்லாம்" என்றான் ஒருவன். "ஆமா. அதுல எத்தனை வகைகள் இருக்குது, பார்த்தியா?" என்றான் மற்றவன். "இந்தக் குளம் அதிக ஆழமில்லாதது போல இருக்குதே" என்று கேட்ட முதலில் பேசிய மீனவன் "நாம சில மீன்களைப் பிடிக்கலாமா?" என்று கேட்டான். "இப்போ அதிக நேரமாகியிச்சு.

அது தவிர மேல சுமையைத் தூக்கிக் கொண்டு நாம அதிகத் தொலைவு போக வேண்டும். அதனால நாளைக்கு இங்கு வரலாம்" என்று, யோசனை கூறினான் அடுத்தவன். இருவரும் அந்த இடத்தை விட்டு போனாங்க. குஜன், குளத்திலிருப்பவைகளைப் பாத்து, "அந்த மீனவர்கள் பேசியது உங்க காதுல விழுந்ததா? நாம் இந்தக் குளத்தை விட்டு வேறு பாதுகாப்பான இடத்திற்கு போய்டலாம்" ன்னு சொல்லுச்சு.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலேயே மிகப்பெரிய மனிதன் யார்? ஒரு வேர்க்கடலையை சாப்பிட்டுவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன். – பாலக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நம் தமிழினத்துக்கு எதிரி தமிழர் என்பதுதான் உண்மை

அதிகாரம் வேண்டும் என்று நாம் கேட்பது நியாயமானது. ஆனால் அந்த அதிகாரம் கிடைக்கும்போது அதனை ஏற்று நிர்வாகம் நடத்துகின்ற மனநிலை எமக்கு உண்டா? என்பதை நிச்சயம் நாம் ஆராய வேண்டும்.

அவ்வாறு ஆராய்ந்தால், தமிழ் இனத்திடம் அவ்வாறான மனநிலை இல்லை என்பதை நாம் கண்டறிய முடியும்.

அத்தோடு, தமிழினத்துக்கு தமிழர்கள் தான் எதிரிகள் என்ற உண்மையையும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

உண்மை. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது சூரிய மின்கலம் (Solar) பொருத்துவதற்கான வங்கிக் கடனுக்கு வெறும் 4 வீத வட்டி மட்டுமே அறவிடப்பட்டது.

ஏலவே எட்டு வீதமாக இருந்த வட்டி வீதம் குறைக்கப்பட்டு நான்கு வீதமாக அறிவிக்கப்பட்டது.

இருந்தும் அந்தக் கடனைப் பெற்று சூரிய மின்கலம் பொருத்துகின்ற கிடைப்பனவு நம் தமிழ் மக்களுக்கு இருக்கவில்லை.

இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தால் சூரிய மின்கலம் பொருத்துவதற்கான அனுமதியை இலங்கை மின்சார சபையின் வட பிராந்தியம் வழங்கவில்லை.

மின் சக்தியைச் சேமிப்பதற்கான கொள்ளளவு இல்லாத காரணத்தால், சோலர் பொருத்துவதற்கான அனுமதியை வழங்க முடியவில்லை என்பதாக பதிலளிக்கப்பட்டது.

ஆனால் நான்கு வீத வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டதும் சோலர் பொருத்துவதற்கான அனுமதியை இலங்கை மின்சார சபையின் வட பிராந்தியம் வழங்கியது.

ஆக, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, சூரிய மின்கலம் பொருத்துவதற்காக நான்கு வீத வட்டியில் வழங்கப்பட்ட வங்கிக் கடனை சிங்கள, முஸ்லிம் மக்கள் முழுமையாகப் பெற்றுக் கொள்ள தமிழ் மக்கள் அதன் நன்மையை கிஞ்சித்தும் அனுபவிக்காமல் தடுக்கப்பட்டது.

இதைச் செய்தவர்கள் சிங்களவர்கள் அல்ல என்பதை இங்கு பகிரங்கமாக கூறித்தானாக வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, நேற்றைய தினம் ஓர் அன்பர் உரையாடும்போது, தனது மருமகன் பிரதேச செயலகத்தில் பணியாற்றுவதாகவும் அவர் வெளிநாடு செல்வதற்காக ஐந்து வருட விடுமுறைக்கு விண்ணப்பித்துவிட்டு கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக கொழும்புக்குச் சென்று; சம்பந்தப்பட்ட சிங்கள அதிகாரிகளுடன் அதுபற்றி கதைத்தபோது, அவர்கள் முதலாவது சுற்றுநிருபம் செல்லுபடியாகும் திகதியில் அந்த விடுமுறையை வழங்கியதாக தெரிவித்திருந்தார்.

அதாவது முதலாவது சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஐந்து வருட விடுமுறைக் காலமும் சேவைக் காலத்தில் சேர்க்கப்படுவதாகவும் அதேநேரம் தற்போது அமுலில் இருக்கின்ற சுற்றுநிருபத்தின் பிரகாரம் விடுமுறைக் காலம் சேவைக்காலத்தில் சேர்க்கப்படமாட்டாதென்பதாகவும் இருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஆம், சிங்கள அதிகாரிகள் மனிதநேயத்துடன் நடந்து கொள்வார்கள். ஆனால் எங்களுடைய தமிழ் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களாக இருந்தாலன்றி, மற்றவர்களுக்கு சட்டத்தைக்கூட அமுல்படுத்தாமல் தாங்கள் நினைத்தபடி அறுத்துக் கழுவுவார்கள் என்பதுதான் உண்மை என்றார் அந்த அன்பர்.

# இனப்பிரச்சினையை தீர்க்க சமஷ்டியே ஒரேவழியாகும்

## முன்னணி ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினையை தீர்க்க சமஷ்டியே ஒரே வழியாகும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

கடந்த வாரம் 13ஆம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கட்சித் தலைவர்களிடம் கோரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு எழுத்து மூலம் நேற்று கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஒப்பமிட்ட கடிதம் நேற்று அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த கடிதத்தில்,

13ஆம் திருத்தம் இனப்பிரச்சினைத் தீர்வின் தொடக்கப்புள்ளியாகவோ இறுதித் தீர்வாகவோ ஏற்றுக் கொள்ள முடியாது என்பதனைத் தெளிவுபடுத்தி 1987 ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தரப்புக்களால் 13ஆம் திருத்தம் நிராகரிக்கப்பட்டது என்பதனைச் சுட்டிக்காட்டி வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் தமிழ்த் தேசம் இறைமை சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசியல் யாப்பின் மூலம் மட்டுமே 75 வருடங்களாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்பதனைத் தெளிவுபடுத்தி கடிதம் எழுதப்பட்டுள்ளது.

13ஆம் திருத்தம் 1987 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டபோது அதனைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தொடக்கப்புள்ளியாகக் கூட ஏற்றுக் கொள்ள முடியாதெனக் குறிப்பிட்டு அதனைச் சட்டமாக நிறைவேற்ற அனுமதிக்க வேண்டாமென்றும் அதனைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம், செயலாளர் அமிர்தலிங்கம் சிரேஷ்ட உப தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோர் ஒப்பமிட்டு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய கடிதமும் இணைக்கப்பட்டதுடன்,

கடந்த 2016 ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து தயாரித்த தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டித்தீர்வு யோசனை வரைபும் இணைத்து நேற்று கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களால் கடிதம் கையளிக்கப்பட்டது. (ம-7)

## வடக்கு – கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு அக்கறையில்லை

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு அக்கறையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு- கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் பேசுவதாக ஜனாதிபதி கூறினார்.

முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேசுவதாகக் கூறினார்.

ஆனால், அந்த மாகாணங்களில் வாழும் சிங்கள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு தெரியவில்லையா?

யாழ். திஸ்ஸ விகாரையில் சமயக்கிரியைகளில் ஈடுபடமுடியாத நிலைமை ஏற்பட்டது. குருந்தூர்மலையில் பிரச்சினை உள்ளது.

வடக்கு - கிழக்கில் சிறுபான்மையாக வாழும் சிங்கள மக்கள் எவ்வளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் தெரியுமா?

எனவே, ஒரு தரப்பினரின் பிரச்சினைகளை மட்டும் பார்க்காமல், அனைத்து இன மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## வாள்வெட்டு குழு வவுனியாவில் அட்டகாசம்

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் வாள்வெட்டு குழு ஒன்று வாள் வீசி அட்டகாசம் செய்துள்ளதுடன், அதனை தடுக்க சென்ற புலனாய்வு துறை உத்தியோகத்தர் மீதும் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று மாலை வவுனியா, வைரவபுளியங்குளம், யங்ஸ்ரார் விளையாட்டு மைதானம் முன்பாக குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. குறித்த மைதானத்தின் முன் வீதியில் நின்ற சில இளைஞர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் வந்த சிலர் வாள் வீசி தாக்குதல் மேற்கொள்ள முற்பட்டதுடன், சிறிது நேரம் அப்பகுதியில் வாள்களுடன் நின்று அட்டகாசம் செய்துள்ளனர். இதன்போது அப்பகுதிக்கு வந்த புலனாய்வுத்துறை உத்தியோகத்தர் ஒருவர் குறித்த இளைஞர்களை கட்டுப்படுத்த முயன்றுள்ளார். அவர் தான் புலனாய்வுத் துறை என்பதை உறுதிப்படுத்திய போதும் அவர் மீது வாள் வீசி தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்துள்ளனர்.

குறித்த இடத்திற்கு பொலிஸார் வருகை தந்த போது வாள்களுடன் நின்றவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளத்தில் மின்சாரம் தடைப்படும்.

## சுகாதாரச் சீர்கேடு யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இரு உணவகங்களுக்கு சீல்

யாழ்ப்பாணம் பிரதான நகர்ப் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களை நீதிமன்ற அனுமதியுடன் சுகாதாரப் பிரிவினரால் சீல் வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பாலமுரளி அவர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம், பொதுச் சுகாதார பரிசோதகர் பா. சுஞ்சீவன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண நகர்ப் பகுதி உணவகங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய யாழ்ப்பாண பேருந்து நிலையத்திற்கு பின்புறம் அமைந்துள்ள ஒரு அசைவ உணவகமும், யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் அமைந்துள்ள ஒரு அசைவ உணவகமும் பொது சுகாதார பரிசோதகர்களின் பரிசோதனையில் சிக்கின.

இரு உணவக உரிமையாளர்களிற்கும் எதிராக நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் யாழ்ப்பாண நகர் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் உணவக உரிமையாளர்களை தலா ஒரு இலட்சம் பிணையில் விடுவித்ததுடன், குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை உணவகங்களை சீல் வைத்து மூடுமாறு கட்டளை வழங்கிய நிலையில் வழக்கினை 18.10.2023ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மேலும் இதனை தொடர்ந்து பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் குறித்த உணவகங்கள் இரண்டும் நேற்று புதன்கிழமை சீல் வைத்து மூடப்பட்டது. (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இவர் ஜனாதிபதியாக இருந்த போது, இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் இருபதாவது திருத்தம் மூலம் தனது பதவி அதிகாரங்களை அதிகரித்தார், ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் பல அதிகார பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

கொவிட் -19 தொற்றுநோய் தொடங்கிய 2020 காலப் பகுதியில் வெற்றிகரமாக நாட்டை வழிநடத்தினார். ஆனாலும் 1948 இல் நாடு விடுதலை பெற்ற பின்னர் இலங்கை முதல் தடவையாகக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையை அறிவிக்கும் வகையில் பொருளாதார முறைகேடு நாட்டை 2022 தொடக்கத்தில் திவாலாக்கியது.

2022 யூலை 13 அன்று, கோட்டாபய இராணுவ விமானம் மூலம் நாட்டை விட்டு மாலை தீவுகள் வழியாக சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றார். அவர் இலங்கையில் இல்லாத நேரத்தில் ஜனாதிபதியின் பணிகளை, கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தற்காலிக ஜனாதிபதியாக நியமித்தார். 2022 யூலை 14 அன்று, கோட்டாபய தனது பதவி விலகல் கடிதத்தை சிங்கப்பூரில் இருந்து அதிகாரபூர்வமாக அனுப்பினார். சிங்கப்பூரில் 28 நாட்கள் தங்கியிருந்த கோட்டாபய, 2022 ஒகஸ்ட் 11 அன்று தாய்லாந்து சென்றார். கோட்டாபயவின் பாதுகாப்பை இலங்கை அரசு உறுதி செய்ததை அடுத்து அவர் மீண்டும் 2022 செப்டெம்பர் 2 அன்று இரவு இலங்கை திரும்பினார்.

**2022 ஆம் ஆண்டு இலங்கைப் போராட்டங்கள் பற்றி.....**

2022 ஆம் ஆண்டு இலங்கைப் போராட்டங்கள் என்பது இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மார்ச் 2022 இல் தொடங்கிய வெகுஜனப் போராட்டங்களாகும். கடுமையான பணவீக்கம், தினசரி மின்தடை மற்றும் எரிபொருள், உள்நாட்டு எரிவாயு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையை உள்ளடக்கிய பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்த இலங்கைப் பொருளாதாரத்தை கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் தவறாக நிர்வகிப்பதாக கூறி ஆரம்பிக்கப்பட்ட வெகுஜனப் போராட்டங்களாகும்.

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த முக்கிய நபர்கள் பதவி விலக வேண்டும் என்பதே போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்தது. பல எதிர்க்கட்சிகளின் ஈடுபாடு இருந்த போதிலும், பெரும்பாலான எதிர்ப்பாளர்கள் தங்களை அரசியலற்றவர்கள் என்று காட்டிக் கொண்டனர். மேலும் சிலர் பாராளுமன்ற எதிர்க்கட்சி மீது கூட தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

போராட்டத்தின் போது, "கோத்தா வீட்டுக்குப் போ", "ராஜபக்ஷ வீட்டுக்குப் போ" போன்ற கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர். போராட்டங்கள் முக்கியமாக பொதுமக்களால் ஏற்படுத்தப்பட்டது. இளைஞர்கள் காலிமுகத்திடலில் போராட்டங்களை நடத்தி முக்கிய பங்கு வகித்தனர்.


**இலங்கைப் பொருளாதார நெருக்கடி**

இலங்கைப் பொருளாதார நெருக்கடியானது 2019 ஆம் ஆண்டு தொடங்கியது. அது 2022 இல் உச்சம் அடைந்தது. 1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் நாட்டின் மிக மோசமான பொருளாதார நெருக்கடி இதுவாகும். இது முன்னொரு போதுமில்லாத அளவு பணவீக்கம், அந்நியச் செலாவணி கையிருப்பு கிட்டத்தட்ட கீழ் நிலைக்கு குறைதல், மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் அடிப்படைப் பொருட்களின் விலை உயர்வு போன்றவற்றுக்கு வழிவகுத்து விட்டது.

வரி குறைப்பு, பணம் அச்சிடல், இயற்கை அல்லது உயிரியல் விவசாயத்திற்கு மாறுவதற்கான நாடு தழுவிய கொள்கை, 2019 இல் ஈஸ்டர் குண்டுவெடிப்பு போன்ற நிகழ்வுகள் மற்றும் கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கம் போன்ற பல கூட்டு காரணிகளால் நெருக்கடி விரைவுபடத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் 2022 இல் இலங்கைப் போராட்டங்களுக்கு வழிவகுத்தன.

அதாவது இலங்கையின் பொருளாதார நெருக்கடி (economic crisis) என்பதிலிருந்து உணவுப் பொருள், எரிபொருள், அத்தியாவசிய மருந்துகள் என அனைத்து நுகர்பொருட்களுக்கும் தட்டுப்பாடு, பயங்கரமான உணவுப் பொருள் விலையேற்றம், மருத்துவமனைகள் இயக்கம் நிறுத்தம், முதலீடுகள் முடக்கம், அமைதியிழந்து வீதிக்கு வந்து போராடும் மக்கள் என்று மனிதவாழ்க்கை நெருக்கடி (humanitarian crisis) என்ற நிலையை அடைந்தது.

2010 ஆம் ஆண்டிலிருந்து, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் கடுமையாக உயர்ந்தது. 2019 இல் அது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 88% ஐ எட்டியது. கொவிட்-19 பெருந்தொற்றால் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார மந்தநிலையின் தொடக்கமானது நெருக்கடியை விரைவுபடுத்தியது. மேலும் 2021 ஆம் ஆண்டில், வெளிநாட்டுக் கடன், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 101% ஆக உயர்ந்தது. கடந்த 10 வருட கால (2013-2022) அரச கடன் மற்றும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் படம் - அ வில் காட்டப்பட்டுள்ளது. (இவ் வீதத்தைக் குறைப்பதற்காகவே அரசாங்கம் கடன் மறுசீரமைப்பில் தற்போது ஈடுபட்டுள்ளது)




இலங்கைக்கு சுமார் 51 பில்லியன் டொலர் அளவுக்கும் மேல் வெளிநாட்டுக் கடன் இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது (2005 இல் வெளிநாட்டு கடன் 11.3 பில்லியன் டொலராக இருந்தது குறிப்பிடத்தக்கது) . அதில் சுமார் 7 பில்லியன் டொலர்களை சென்ற ஆண்டு (2022) மீளச் செலுத்த வேண்டியிருந்தது.

ஆனால் இலங்கையின் கையிருப்பில் 2022 மார்ச் அளவில் சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களே இருப்பதாக மதிப்பிடப்பட்டது. இப்படியொரு சூழலில் தனது கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த இயலாது என இலங்கை 2022 ஏப்ரலில் அறிவித்திருந்தது. அதாவது இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்காக மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு இருப்புக்களை வைத்திருக்க வேண்டிய தேவையுள்ளதால் இலங்கை வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவித்திருந்தார்.

இப்பொருளாதார நெருக்கடி கடந்த ஓரிரு ஆண்டுகளில் தோன்றியதொன்றல்ல. இது சுமார் 7 வருடங்களுக்கு முன்னதாகவே தோன்றிவிட்டது என்று பொருளியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

**2015 ஆம் ஆண்டுக்குப் பின் நாட்டின் பொருளாதார பின்னடைவு**

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநரான டபிள்யூ. ஏ. விஜேவர்தனவின் கூற்றுப்படி, நாடு 2015 இல் இருந்து இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தது. 2015 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இதை அறிந்திருந்தது. மற்றும் இலங்கையின் கொள்கை ஆய்வுகள் நிறுவகம் பல அபாயங்கள் இருப்பதாக எச்சரித்திருந்தது.

2015 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு வலுவான பொருளாதாரக் கொள்கையை முன் வைத்திருந்த போதும் கூட்டரசாங்கத்தால் அந்தக் கொள்கையை பாராளுமன்றத்தில் கொண்டு செல்ல முடியவில்லை. இது இறுதியில் தொடர்ந்து வந்த மாதங்களில் மேலும் கொள்கை குழப்பத்தை ஏற்படுத்தியது.

மேலும் அரசாங்கம் "அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்" போன்ற பிற அரசு தொடர்பான நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால் பொருளாதார எச்சரிக்கைகள் மற்றும் வளர்ந்து வரும் ஆபத்துகளை போதுமான அளவில் கவனிக்க தவறிவிட்டது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில்...

இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்துள்ள குறித்த நபர் மன்னார் முள்ளிக்குளம் பகுதியை சேர்ந்த செபமாலை நிரோஜன் (வயுது-22) எனவும், வெற்றிலைக்கேணி பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த இளைஞன் கம்பம் ஒன்றில் மோதி படுகாயம் அடைந்த நிலையில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டவேளை அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60,104)

## தமிழர்கள்...

நேரில் சவால் விடுத்தார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய விசேட உரையை தொடர்ந்து கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு சவால் விடுத்தார்.

இந்த நாட்டில்புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு ஒன்று வரக்கூடாது என்பதே ஜனாதிபதியின் உரையை தொடர்ந்து உரையாற்றியவர்களின் கருத்துக்களாகவுள்ளன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எத்தனை சிங்கள தலைவர்கள் தயாராக இருக்கின்றீர்கள்?

தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா?, சமஷ்டி அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா? என்பதை அறிய வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்களிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசு தயாரா? என கேள்வியெழுப்பினார்.

இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளிக்கையில், அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நான் தயாராகவுள்ளேன், தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதை நான் அறிந்துள்ளேன். நீங்கள் என்னை சிங்கள இனவாதி என்று குற்றம் சாட்டுகின்றீர்கள் ஆனால் அத்துரலியே தேரர் எம்.பி. என்னை தமிழ் ஆதரவாளர் என்கிறார், அப்படியானால் நான் யார்? என கேள்வி எழுப்பினார்.

எனினும், சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசு தயாரா ? என்ற சிறீதரன் எம்.பி.யின் விடுத்த சவால் தொடர்பில் எதனையும் கூறவில்லை. (ம-7)

## தொல்லியல்...

அத்துடன் விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளாமல் எப்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது என தொல்லியல் திணைக்களத்திடம் விசாரணை நடத்தவும் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று பாராளுமன்ற வளாகத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பறாளாய் முருகன் கோவில் விடயமாக பேச்சு நடத்தினார்கள்.

நேற்று இந்த விவகாரம் பற்றி இருவரும் தனது கவனத்திற்கு கொண்டு வருவதற்கு முன்னர் இப்படி ஒரு பிரச்சினை நீடிப்பது தனது கவனத்திற்கு யாராலும் கொண்டுவரப்படவில்லை என ரணில் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

பறாளாய் முருகன் கோவிலில் வரலாறு சுமார் 300 ஆண்டுகளுக்கு உட்பட்டது என குறிப்பிட்டு சம்பவத்தின் பின்னணியையும் வரலாற்று சுருக்கத்தையும் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் விளக்கமளித்தார்.

போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது நாட்டியிருந்த அரச மரங்களை எல்லாம் அழித்து விட்டதாக தெரிவித்தார்.

மரத்தின் ஆயுட்காலத்தை அளவிடும் பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிடுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-7,104)

## வடக்கில்...

முறைக் காலம் சேவைக்காலத்தில் சேர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இச்சுற்றுநிருபம் செல்லுபடியாகும் காலத்தில் விடுமுறைக்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை வடக்கு மாகாண அதிகாரிகள் வேண்டுமென்றே திருப்பி அனுப்பியதாக சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனினும் தற்போது முதலாவது சுற்றுநிருபம் திருத்தப்பட்டு விடுமுறைக் காலம் சேவைக்காலத்துக்குள் சேர்க்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஏலவே விண்ணப்பித்து திருப்பி அனுப்பப்பட்ட அரச ஊழியர்கள் மீளவும் விடுமுறைக்காக விண்ணப்பிக்கும்போது, முதலாவது சுற்றுநிருபத்தின் சலுகைகளை அனுபவிக்க முடியாமல் போவதாகவும் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே இது விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

## வடக்...

உடனடியாக விடுவிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 3 - 6 மாதங்களுக்குள் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில் இராணுவத்தினால் அடையாளங் காணப்பட்டுள்ளன.

பலாலி இராணுவ முகாமில் இருந்து சுமார் 290 ஏக்கர் காணி விவசாயம் மற்றும் பருவகால பயிர்ச் செய்கைகள் உள்ளிட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக தற்காலிகமாக விடுவிக்கப்படவுள்ளன.

இராணுவத் தளபதியின் பணிப் புரையின் பேரில் வட மாகாணத்தில் தற்போதும் விடுவிக்க முடியாத காணிகளை விடுவிப்பது தொடர்பிலான சாத்தியக் கூறுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன என்றார். (ம-7)

## 13ஐ...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் 13ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.இதற்கு பாராளுமன்றில் உள்ள அனைவரும் கலந்துரையாடி, தீர்மானம் ஒன்றை எட்ட வேண்டும். இதன் காரணமாகவே சர்வகட்சி கூட்டம் நடத்தப்பட்டது.

எனினும் சில கட்சிகள் முழுமையாக தங்களது தீர்மானங்களை வெளியிடவில்லை என்றார். (ம-7)

நாகபூசணி அம்மன் அருளுடன்
NLB, DLB கனகலிங்கம் திலகவதி யாழ்.முகவர்கள்
08.08.2023 அபிவிருத்தி லொத்தர் சபையில் கோடிபதி கப்ருக லொத்தர் சீட்டிழுப்பில் இரண்டு இலட்சம் ரூபாய் பணப் பரிசு யாழ்.முகவர் கனகலிங்கம் திலகவதி மூலம் விற்பனை செய்யப்பட்டு வெல்லப்பட்டுள்ளது. மேலும் அதே தினத்தில் சசிரி லொத்தர் சீட்டிழுப்பில் இரண்டு இலட்சம் ரூபாய் பணப் பரிசு கனகலிங்கம் திலகவதி மூலம் வெல்லப்பட்டுள்ளது.
வாங்குவோம் வெல்வோம்
அதிர்ஷ்டத்தின் பிரதான முகவர்கள் கனகலிங்கம் திலகவதி
(16671)
தொடர்பு: 077 603 1723

மெகா பவர்
திகதி 09/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1549
B 22 14 16 26 75
20199

தன நிதானய
திகதி - 2023.08.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1231
R 10 43 58 73 R
33334

Lucky 7
திகதி 09.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0027
L7 இலக்கம் 2 8
கன்னி 9 9 2 1 6 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3443
சீட்டிழுப்பு திகதி 09.08.2023
W 47 50 54 73
W 33432

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.09
சீட்டிழுப்பு இலக்கம் 510
கடகம் 16 17 30 52 கடகம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/09
சீட்டிழுப்பு இலக்கம் 5201
C 9 1 5 7 1 8

ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இலக்கம் : 2001
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,502,952/-
22 39 46 56 A
21 28 33 55 P

Jayoda
திகதி 2023.08.09 சீட்டிழுப்பு இலக்கம் 1946 வர்ணம் மஞ்சள்
17 49 56 57 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,345,839.20
06 12 24 60 B

கப்ருக
திகதி 2023.08.09 சீட்டிழுப்பு இலக்கம் 1351
V 12 27 30 33 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 426,248,014.20
23 24 31 38 F


ராசி
சீட்டிழுப்பு இலக்கம் 3887 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.08.09 தினம் புதன்கிழமை
15 23 36 42 மேஷம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-
04 06 47 59 கும்பம்

சனிதா
திகதி 2023.08.09 சீட்டிழுப்பு இலக்கம் 4336 வர்ணம் ஊதா
17 22 30 67 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,716,132.00
11 29 47 51 K

SUPER BALL
சீட்டிழுப்பு இலக்கம் 2175 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.09 தினம் புதன்கிழமை
51 54 56 68 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,036,188.40
04 16 48 55 M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 21 . 05 . 1948

விண்ணில் 01 . 08 . 2013

(திதி : 10.08.2023 தேய்பிறை தசமி)

## ஆனந்தன் செல்வநாதன்

(உரிமையாளர், அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)

அன்பே உருவான கருவில் அவதரித்து
இன்பம் தழைத்தோங்க இன்முகத்தால் வரவேற்று
பண்பை பணிவை பார்போற்றும் உழைப்பை
எமக்கு புரிய வைத்து அன்பாய் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று பத்து ஆண்டுகள் சென்றதே! அப்பா
எங்கு சென்றீர்கள் சென்ற வழி தேடுகிறோம்
வருவீரோ எம் மனக்குறை தீர்க்க...
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 22, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (C-7044)

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=
(16349)
T.P:077 544 8503

## நாய்க்கடிக்கு...

கிறது.இருந்தும் நாய்க்கடிக்கு இவர் உரிய முறையில் சிகிச்சை பெறவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் இயலாமை காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார். (ம-7,104)

## கர்ப்பவதி...

களின் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

கர்ப்பவதி தாய்மார்களுக்கு பல்வேறு ஒவ்வாமை சிக்கல்கள் ஏற்படுவதற்கு அதிக வெப்பம் வழிவகுப்பதாக சங்கத்தின் தலைவர் தேவிகா கொடிதுவக்கு தெரிவித்தார். அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கர்ப்பவதி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளை வெயிலில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16657)
076 825 7716 (ஆகாஸ்)

Led video Wall Rent/
Live Streaming
உங்கள் நிகழ்வுகளை நேரடியாகவும்
(Live Streaming)
பிரமாண்டமான வீடியோ திரையில்
(Led Video Screen)
காட்சிப்படுத்த அழையுங்கள்
(16621)
075 111 2222

விற்பனைக்கு
Yamaha mate90
மோட்டார் சைக்கிள்
விற்பனைக்குண்டு.
(16672)
077 773 0567

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7045)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு (C-7045)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

# மரண அறிவித்தல்



தோற்றம் : 12.08.1929 மறைவு : 08.08.2023

## திருமதி இராசதுரை இராஜேஸ்வரி

கரணவாய் கிழக்கு மணற்பாதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை இராஜேஸ்வரி அவர்கள் 08.08.2023 செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராசதுரை(ஓய்வு நிலை நிதி உதவியாளர் - வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சற்குணம், காலஞ்சென்ற இராசகுலேந்திரன், புவனேந்திரன்(சுவிஸ்), மங்களேஸ்வரி(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்), கமலேஸ்வரி (ஓய்வுநிலை குடும்பநல உத்தியோகத்தர்), இரத்தினேஸ்வரி (சுவிஸ்), விக்கினேஸ்வரன்(சுவிஸ்), காலஞ்சென்ற சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான துரைராஜா, கமலாம்பிகை ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் குமுதினி(ஓய்வுநிலை ஆய்வுகூட உதவியாளர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி), ரதினி, இராஜமோகன்(சுவிஸ்), நந்தினி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்னையா (ஓய்வுநிலை கோட்டக் கல்வி அதிகாரி - மருதங்கேணி கரவெட்டி, முன்னாள் - உப தவிசாளர் - கரவெட்டி பிரதேச சபை), சிறிபாலசுந்தரம் (ஓய்வுநிலை பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்), சாந்தினி(சுவிஸ்), சுந்தரமூர்த்தி (கனடா) ஆகியோரின் மாமியாரும் துஷாந்தி(சவுதி),, நிஷாந்தி (பொறியியலாளர் - தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை), ரிஷபன் (கணிய அளவையியலாளர் - கட்டார்), சாகித்யா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசன திணைக்களம், கிளிநொச்சி), அஸ்விதா (சுவிஸ்), மிதுனா (சுவிஸ்), மவுனிகா (கனடா), ஜான்சிகா (கனடா), தயானந்தன் (கணக்காளர் சவுதி), புஸ்பரூபன் (பொறியியலாளர், மின்சார சபை), சிந்துஜா (கட்டார்), யுதிஸ்தான் (கனடா), ஜொனாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மேனுஷன் (சவுதி), சஸ்விகா (சவுதி), ஆதினி (கட்டார்), ஆதிவள்ளுவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் கரணவாய் கிழக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 038 1779 (16670)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191 பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.